முருகப்பெருமான் துணை

**மகான் அம்பிகானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.07.2021, சனிக்கிழமை

1. சத்திய வழிகாட்டும் அரங்கனே
சன்மார்க்க நெறியூட்டும் தேசிகனே
உத்தம மாந்தர்களை படைத்து
உலகமாற்றம் செய்ய வேண்டி
2. வேண்டியே அவதாரம் புரிந்து
வெற்றிமுகம் காட்டும் குருவே
தொண்டு வழி இந்த கலியுகம்
தெய்வநிலை பெற்று மாறுமெனக்கூறி
3. கூறியே பிலவ மிதுன திங்கள்
குறைவிலா இருபானாற்திகதி காரிவாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 26ம் நாள், 10.07.2021 சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அம்பிகானந்தர் யானும்
தேசிகனுக்கு துல்லிய ஆசியுரைப்பேன்
4. உரைக்கவே பேரிடர் கண்டும்
ஊழலில் சிக்குண்ட துறைகள்
கரைகள் விலகும்படி இனி
கந்தப்பெருமான் வெளிப்பாடிருக்க
5. இருக்கவே ஏழாம் படைவீடு
ஏழ்மையை விரட்டும் வீடு
வருத்தம் கஷ்டம் அனுபவிப்பவரின்
வாழ்வை மாற்றும் ஞானவீடு
6. வீடதனை வணங்கி வந்து
விடாது பூசை கலந்து
தடையற அன்னதான சேவை ஆற்றி
தரணியோர் தொடர்ந்து வர
7. வருகவே நிலைமைகள் மாறும்
வள்ளல் தன்மை பெருகி
முருகப் பெருமான் ஆளுமையாக
முழுமையான ஞானபூமியாக மாறும்
8. மாறுதலை செய்து காத்து
மாண்புகளை வேதமாக அருளி
ஆறுமுகன் வழிபாடு பெருக்கி
ஆதிசக்தி அனைத்து மகா
9. மகா சக்திகளின் தயவுபெற்று
மகானாய் அருளும் அரங்கனுக்கு
மகா சக்தியாய் அம்பிகானந்தர் யானும்
மகாமந்த்ர தீட்சைவழி அருளிவர

10. வருபவர்க்கு எந்தன் அருளும்
வரமும் பலமாகக் கிட்டும்
தருமராசனாக உலக மக்கள்
தவசி மூலம் தனித்துவம்பெற்று

11. பெற்றுமே காலத்தை வெல்லும்
பிரம்ம ஞானிகளாக மாறுவர்
மாற்றம் செய்து உலகில் தேறுவர்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–